Registered as a News Paper in Sri Lanka



# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

வெளியீடு:-53 ஜுலை JULY 2009 விலை: 15.00

சுதந்திரத்திற்கான மக்கள் இயக்கத்தின் முதற்படி நிலை பயத்திலிருந்து விடுபடுவதே!

# என்ன செய்ய வேண்டும்?

## அன்பிற்கினிய யாழ் மாநகர மக்களே!


கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக பேரழிவுகளையும் இழப்புக்களையும், துன்பங்களையும், சுமந்து நிற்கிறீர்கள். இனியாவது எம் வாழ்வில் விடிவு கிட்டுமா என ஏங்கி நிற்கிறீர்கள்.



பயத்திலிருந்து விடுபடவும், ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிக்கவும், சமூக பொருளாதார அபிவிருத்தியைக் காணவும் விரும்புகிறீர்கள்.

எமது தமிழ்ப் பிரதேசங்களில எமது அலுவல்களை நாமே பார்த்துக் கொள்ளும் விதமாக அரசியற் கட்டமைப்பைப்பொன்று ஏற்பட வேண்டுமென்று நீங்கள் நீண்டகாலமாகவே எதிர்பார்த்திருக்கிறீர்கள்.

எமது அண்டை நாடு இந்தியாவும் தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேணடும் என்று அழுத்தம் திருத்தமாகவும் தொடர்ச்சியாகவும் வலியுறுத்தி வருகிறது. இலங்கை அரசும் அதனை மேற்கொள்ளுவதாக வாக்குறுதியளித்துள்ளது.



வண்ணியிலிருந்து இடம்பெயர்ந்த மூனறு இலட்சம் மக்களும் இன்னும் 180 நாட்களுக்குள தமது சொந்தப் பிரதேசங்களில் குடியேற்றப்படுவார்கள் என வாக்குறுதியளிக்கப்பட்டுளளது.

இந்த இரண்டு காரியங்களும் நிகழ்ந்தாலே மக்களின் மனக்காயங்களை சற்று ஆற்றுப்படுத்துவதாக இருக்கும்.

ஆனால், இவை மட்டும் போதாது. அரசியலில் ஜனநாயகம் நிலை நாட்டப்படுவதோடு வன்முறைக் கலாச்சாரம் ஒழிந்து போவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொதுவாகவே யாழ் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துத் தடைகள், இடையூறுகள் களையப்பட வேண்டும். யாழ் குடாநாட்டினுள்ளும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் சுதந்திரமாக சென்று வருவதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும. மின்சாரம், குடிநீர், சுகாதாரம், வீட்டு வசதி உளளிட்ட மக்களின் ஜீவாதார தேவைகளில் அதிகூடிய கரிசனை செலுத்தப்பட வேண்டும்.



08
**தி. ஸ்ரீதரன் (சுகு)**

குறிப்பாக யாழ் மாநகரசபை எல்லைக்குள் மிகப் பிரமாண்ட

(தொடர்ச்சி 03ம் பக்கம்...)



10
**க. சிவராஜா (மோகன்)**



11
**கா. ஜெயக்குமாரன் (கங்கா)**



26
**ச. பிரான்சிஸ் (சின்ராசா)**



03
**அன்ரன் கோமஸ் சர்மிலா**

# உடனடியாக ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

### — இரா. துரைரட்ணம்



30 வருடங்களாக எமது மாவட்டங்களில் ஆயுத வன்முறையாளர்களினால் மிகவும் மோசமான வன்முறைச் சம்பவங்கள் நடந்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும். தற்சமயம் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு ஆயுத வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து சட்ட ஒழுங்கிற்கு கீழ் நிர்வாகம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

ஆயுத வன்முறையற்ற சூழலை ஏற்படுத்தி அனைத்து மக்களும் பாதுகாப்பாடின்றி பய பீதின்றி வாழ்வதையே மக்கள் விரும்புகின்றனர். இவ் விருப்பத்தை ஈடு செய்யும் முகமாக புதைத்து வைக்கப்பட்டிருக்கின்ற, மறைத்து வைக்கப்பட்டிருககின்ற, சில அரசியல் கட்சி அலுவலகங்களில் வைத்திருக்கும் ஆயுதங்களும், தமிழ், முஸ்லீம் கிராமங்களில் தனிநபர்கள் ஒளித்து வைத்திருக்கும் ஆயுதங்களும், அரசியல் பலமுள்ளவர்களிடம் உள்ள ஆயுதங்ளும் உடனடியாக களையப்பட வேண்டும்.

அரசாங்கத்தினால் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென்ற பத்திரிகை வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. இது உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்க அதிபரின் வீடு பட்டப்பகலில் ஆயுததாரிகளினால் கொள்ளையடிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் உட்பட முஸலீம் வர்த்தகர்கள் வரை ஆயுததாரிகளின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அப்பாவி பொது மக்களின் வீடுகள் ஆயுததாரிகளினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. சில கிராமங்களிலுள்ள அரசியல் அலுவலங்களில் ஆயுதங்களை பகிரங்கமாக வைத்துள்ளனர். காட்டு மரங்கள் வெட்டுதல் தொடக்கம் பொது மக்களிடம் கப்பம் கோருதல் வரை ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பயங்கரவாத ஒழிப்பிற்கு பின் நடந்துவருகின்ற இவ்வாறான சம்பவங்கள் மக்களையும் ஆயுத வன்முறையை எதிர்க்கும் சக்திகளையும் வியப்புக்குள்ளாகியுளளது. எனவே அரசாங்கத்தின் நல்ல நோக்கு ஈடேற வேண்டுமாயின் பக்க சார்பின்றி ஆயுத களைவை செய்து முடிப்பது அரசின் கடமையாகும்.

# கண்டனம்

யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளான தினக்குரல், உதயன், வலம்புரி ஆகிய பத்திரிகைகள் எரிக்கப்பட்ட சம்பவத்தை பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் வன்மையாக கண்டிக்கிறது. இத்தகைய சம்பவங்கள் வன்முறைக் கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டுவரும் நம்பிக்கைகளை சிதறடிக்கச் செய்யும்.

கருத்துகளில் எப்போதும் ஜனநாயகம் நிலவவேண்டும். பன்முகத்தன்மை ஏற்றுக் கொள்ளப் படவேண்டும். பொதுவாக உருவாகி வரும் ஜனநாயக சூழல் பாதுகாக்கப்பட வேண்டும்.

வேறுபட்ட சமூக சாதகமான அபிப்பிராயங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். நூறு கருத்துகள் மலர்வதும் முட்டி மோதுவதுமே சமூகத்தில் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும். கருத்து சுதந்திரத்திற்கு அடிநாதமாக இருப்பது பத்திரிகைச் சுதந்திரம். அது பாதுகாக்கப்படவேண்டும். இல்லையேல் மக்கள் மவுனமாகி விடுவார்கள். மக்கள் மனங்களிலிருந்து பீதி நிலையை நீக்கவேண்டும் அதற்கான சூழ்நிலை உருவாக்கப் படவேண்டும். கருத்துக்களிலும் வன்முறை களையப்பட வேண்டும்.

எமது சமூகத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய கருத்து வன்முறையே பல அழிவுகளுக்கு இட்டுச் சென்றதென்பதை மனதிலிருத்தி ஆகவேண்டும். கண்ணியமானதொரு கருத்து சுதந்தர பண்பாடு எமது சமூகததில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அதற்கான சூழ்நிலை உருவாகிவரும் வேளையில் நம்பிக்கைளை தளர்வடைச் செய்யும் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
Kannottam
தொ.பே.இல:-0112505372 தொ.நகல்:-0112552840
ஈ.மெயில்:- kannoddam@yahoo.com



# வன்முறை ஒழிய வேண்டும் பயத்திலிருந்து விடுபட வேண்டும்

மூன்று இலட்சம் மக்கள் வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் விபரிக்க முடியாத வேதனைகளுடனும், துன்பங்களுடனும், இழப்புக்களுடனும் புண்பட்ட மனதுடனும் உறவுகள் சிதறுண்ட நிலையில் அவலமான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில்தான் யாழ் மாநகரசபை, வவுனியா நகரசபைத் தேர்தல்களையும் நாம் எதிர்நோக்குகிறோம். இம் முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் மக்களின் உறவுகள் இந்த நகரசபை, மாநகர சபை எல்லைக்குள் வாழ்கின்றனர். இந்த மக்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டியவர்களும் அவர்களின் நன்மை தீமைகளில் பங்கெடுக்க வேண்டிய உறவுகளும் இங்கேயே வாழ்கின்றனர்.

எனினும் ஜனநாயக அரசியல் பொறிமுறையின் அங்கம் என்ற ரீதியில் இந்த தேர்தல்களில் பங்கு பற்றியே ஆக வேண்டும்.

அந்த வகையில யாழ் மாநகரசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகள் இணைந்து ஒரு கூட்டாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றன. இதேபோல் வவுனியாவில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் நங்கூரம் சின்னத்தில் போட்டியிடுகின்றன.

இந்தக் கூட்டணி வெற்றிபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

"பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" யை பொறுத்தவரை வன்னி மக்கள் சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் தமது சொந்தப் பிரதேசங்களில் மீளவும் குடியேற்றப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் தமது அலுவல்களை தாமே பார்த்துக் கொள்ளும் விதமாக, அவ்வாறொன்று மக்கள் கருதும் விதமாக அரசியல் அதிகார பகிர்வு கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் இனங்களிடையேயான உறவுகள் ஜனநாயக மயப்படுத்தப்பட்டதாகவும், சமூகங்கள் ஒன்றையொன்று புரிந்து கொள்ளும் விதமாகவும் அமைய வேண்டும்.

வன்முறை கலாச்சாரத்தின் மிச்சம், மீதிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

அரசியல் கட்சிகளிடையே உறவுகள் ஜனநாயக ரீதியாக அமைய வேண்டும். கருத்து உடன்படுவதோ, வேறுபடுவதோ ஆன உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

நாகரிகமான அரசியல் உறவு முறை கட்சிகளிடையே அமைய வேண்டும். அம்பலப்படுத்துவது, விமர்சிப்பது என்பது வேறு, காழ்ப்புணர்வுகளையும், குரோதங்களையும், விரோதங்களையும் வெளிப்படுத்து வதென்பது வேறு என்பது புரிந்துக்கொள்ளப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் சுதந்திரம அவர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். வீதியில் நடமாடும் போதும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்துக்கு சென்று வரும் போதும் அவர்களின் சுயமரியாதை கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படாத விதத்திலும், அவமானகர உணர்ச்சி ஏற்படாத விதத்திலும் நாம் இரண்டாந்தர பிரஜைகள் அல்ல என்ற உணர்வு ஏற்படாத விதத்திலும் பாதுகாப்பு நிலைமைகள் அமைய வேண்டும்.

மனித கௌரவமும் சுயமரியாதையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

வன்முறை அரசியல் பாரியளவுக்கு முடிவுக்கு வந்துள்ள வேளையில் மக்களின் ஜனநாயக சுதந்திரம் என்பதற்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

உலகில் யுத்தங்களின் பின்னர் பாரிய எழுச்சியுடன் சமாதான இயக்கங்கள் எழுந்ததை உலக வரலாறு மூலம் பார்த்திருக்கிறோம்.

எனவே பாரியளவிலான சமாதான பிரவாகமொன்று தற்போது ஊற்றெடுக்க வேண்டும்.

மக்களின் மனதிலிருந்து பீதிகளையப்படவில்லை. இந்த பீதியை போக்கடிக்க வேண்டும்.

யுத்தத்தின் பின்னரும் நிச்சயமற்ற நிலையும், மக்கள் மத்தியில் விரக்தி நிலவுவதும் வன்முறை மீண்டும் தலைதூக்குவதற்கான நாற்றங்காலை இடுவதாகவே அமையும் மக்களின் மனக்காயங்கள் ஆற்றப்பட வேண்டும்.

நாம் யாருக்கும் இரண்டாந்தர பிரஜைகள் அல்ல என்ற நிலை யதார்த்தமாகவே கட்டியெழுப்பப்பட வேண்டும்.

ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

நூறு கருத்துக்கள் மலரட்டும் என்ற நிலை ஊக்கு விக்கப்பட வேண்டும்.

ஆனால் வன்முறையை ஊக்குவிக்கும் கருத்துக்களோ கருத்துக்களுக்கெதிரான வன்முறையோ நாகரிகமான ஜனநாயகமான சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை.

மேலும் யாழ் மாகரசபை, வவுனியா நகரசபை தேர்தல்களில் உள்ளூர் வட்டார மக்களின் பங்களிப்பு கவனயீர்ப்பு அவசியமானது

ஏனெனில் உள்ளூராட்சி சபை என்பது நகரத்தின் சுகாதாரம், குடிநீர் வழங்கல், சுற்றாடல் பாதுகாப்பு வீதிகளை செப்பனிடுதல், நூலகங்களை உருவாக்குதல் உட்பட பன்முகம் சார்ந்த மக்களின் ஜீவாதாரப் பணிகளுடன் சம்பந்தப்பட்டது.

மக்களின் பங்குபற்றுதல் இல்லாமல் அதிகாரிகளாலேயே இந்த சபைகள் நிர்வகிக்கப்படும் அவலம நீண்டகாலமாகவே காணப்படுகிறது.

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் இதில் அங்கத்துவம் வகித்தால்த்தான் மக்கள் கேள்வி கேட்பதற்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் நிலைமைகளை சீர் திருத்துவதற்கு வழி யேற்படும்.

தேர்தல் என்ற நடைமுறை வன்முறை கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் மக்கள மத்தியிலுள்ள பீதியை போக்கடிப்பதற்கும் ஒரு குறிப்பிட்டளவு பங்களிப்பை வழங்கும்.

ஏனெனில் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு அரசியல் கட்சிகளின் பிரச்சாரங்கள் சர்வதேச சமூகம் மற்றும் கண்காணிப்பாளர்களின் அவதானிப்பு உள்ளிட்ட பல அம்சங்கள் இருக்கின்றன.

எனவே இதனை ஆக்கபூர்வமாக மக்கள் சிந்திக்க வேண்டும். தமது பிரதிநிதிகளை தாமே முன்வந்து தெரிவு செய்ய வேண்டும்.

எமது சின்னம் உதயசூரியன். இதற்கு நேரே புள்ளடியிட்டு ஐக்கியத்தையும், ஜனநாயகத்தையும் அதிகாரப் பகிர்வையும், வன்முறையற்ற சூழலையும், சமூக பொருளாதார அபிவிருத்தியையும் காண உதவுமாறு மக்களை விநயமாக கேட்டுக்கொள்கிறோம். ●

## எம் இனிய தோழனே பத்மநாபா

நீ இந்த மண்ணை விட்டு அகன்று
எம் மனதில் மட்டும் நிறைந்து வாழ்ந்த காலங்கள்
பத்தொன்பது வருடங்களை தொட்டு நிற்க்கின்றது

எந்த பாசிசவெறி உன்னை அழித்ததோ
அந்த படுபாதகர்கள் இந்த மண்ணை விட்டு அகற்றப்பட்டு
உன்னை நினைவு கூறும் முதலாவது வருடத்தில் வந்து
நிற்க்கின்றது

தோழனே உன்னை அழித்த
அந்த மனிதனின் மரணத்தில் ஆனந்தபடக்கூட முடியவில்லை
ஏனெனின் எங்களுக்கு தெரியும்
நீ எங்களை நேசித்த அளவிற்க்கு
எதிரியையும் நேசித்தவன் என்று

உன் உதடுகள் அசைந்தாலும்
மௌனித்தாலும்
அதில் உள்ள அர்த்தங்களை புரிந்து கொண்டோம்
ஆனால் உன் மரணத்தின் அர்த்தத்தைதான்
எங்களால் புரிந்து கொள்ள முடிந்திருக்க முடியவில்லை

ஏனெனின்
உன்னை அழித்த அந்த உருவம்
தன் கடைசி நிமிடங்களில்
தன் தவறுகளை எண்ணி பார்த்திருக்குமானால்
அது உன்னுடைய மரணமாகத்தானிருக்கும்
ஏனெனில்
நீ இருந்திருந்திருந்தால்
தான் உயிர் வாழ வழிகிடைத்திருக்கும்
என்ற உண்மை அதற்குகூட தெரிந்திருக்கும்
இது நடந்து விடக்கூடாது என்பதால்தானோ
மரணதேவதை உன்னை அவசரமாய் அழைத்து சென்றுவிட்டது

நீ புத்தனாய் இருந்து போதிக்கவில்லை
ஆனாலும் நாம் நிழலுக்கு கூட போதிமரத்தையே நாடினோம்
நீ சிலுவையை எமது தோழில் சுமக்கவைக்கவில்லை
ஆனாலும் நாம் பாவிகளை மன்னிக்க பழகிக்கொண்டோம்
நீ குர்ஆனையையும் பகவத்கீதையையும் எமது கைகளில்
திணிக்கவில்லை
ஆனாலும் நாம் மானுடத்தின் மகிமையறிந்து நடந்தோம்

நீ தலைமைத்துவத்தை திணிக்கவில்லை
நாங்களாகவே அதை விரும்பிக்கொண்டோம்
உன் அமைப்புக்குள் அதிகாரம் இருக்கவில்லை
அன்பின் ஆதிக்கம் இருந்தது
பகைவன் கூட பணிந்து வரும்
பண்பு இருந்தது

உன் கட்டுமானத்தில் கட்டுப்பட்டிருந்தவர்கள்
ஆயுதத்தை நேசிக்கும் ஆன்மாக்கள் அல்ல
அதை ஏந்தியதற்க்காய் ஆதங்கபட்டவர்கள்
நீ துப்பாக்கியை இயக்க கற்றுதரவில்லை
அதை இயக்காமல் தவிப்பதற்க்கான வழியை
சொல்லித்தந்தாய்

மக்கள் இல்லாத மண்ணை நேசிக்காத
உன் மண்ணில்தான்
தன் உயிருக்காய் மக்களையே யாசித்த ஒருவனுக்காய்
மாண்டுபோன மனித உயிர்கள்தான் எத்தனை?
ஓடி ஓடி ஒழித்தும் பலனற்றிபோய்
உயிரற்ற உடல்களாகி போனது தான் எத்தனை?
ஊனமாகி போன உயிர்கள்தான் எத்தனை?
அனாதைகளாக்கபட்ட அரும்புகளும்
ஆதரவற்றுப்போன விதைவைகளும்
சொந்தங்களை மொத்தமாய் பறிகொடுத்துவிட்டு
பந்தமின்றி பரிதவிக்கும்
உயிர்கள்தான் எத்தனை? எத்தனை?

நிரந்தர அமைதிக்காய்
நிரந்தரமாக தூங்கிபோனவர்களின்
கனவுகள் நிஜமாக
உயிர் ஒன்றே மூலதனமாய் கொண்டு
அடைக்கபட்ட வேலிக்குள் அகதிகளாக போனவர்களின்
வாழ்வின் விடிவுக்காய்
உன் பாதையில் நாம் தொடர்ந்து பயணிப்போம்

எமது மக்களின்
அமைதியும் சுதந்திரமும் நிறைந்த வாழ்வுக்காய்
அன்பு என்னும் ஆயுதம் ஏந்தி
அறவழியில் போராடி
உன் ஆத்மாவை சாந்தியடைய வைப்போம்

உங்கள் தியாகங்களைக் கௌரவப்படுத்தும்
புதிய சமுதாயம் உருவாக்க
உறுதியுடன் உழைப்போம்

மோகன்

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

No: 310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

No: 29A, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

No: 58, முற்றவெளி வீதி
மன்னார்
☎ 023- 2251305

No: 169, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை மீட்போம் நாட்டைக் காப்போம்

— வீ. ஆனந்தசங்கரி



யாழ் மாநகரசபைத் தேர்தலில் நான் போட்டியிட முன்வந்தமை ஆண்டவன் கட்டளையும் கட்டாய தேவையுமாகும். களத்தில் இறங கக்கூடிய பாதுகாப்பான நிலை இன்னும் மக்களுக்கு ஏற்படவில்லை, என்ற கருத்தே பொதுவானதாக நிலவுகிறது. யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டு 12 ஆண்டுகளுக்கு மேலாகியும் பல்வேறு நபர்களின் கைகளில் உள்ள துப்பாக்கிகள் மக்களை மௌனிகளாகவும், எதிர்க்க சக்தியற்றவர்களாகவும் ஆக்கியுள்ளது. நட்புடன் செயற்படும் இராணுவத்தினாலும் கடந்த 12ஆண்டுகளாக இந் நிலையை மாற்றியமைக்க முடியவில்லை. இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்நிலை நீடிக்குமோ நாமறிவோம்.

பதவிக்காக நான் என்றும் அலைந்தவனல்ல. இத்தகைய பதவிகள் பல என்னைத் தேடி வந்தும் என்னால் நிராகரிக்கப்பட்டன. அநேக மக்களின் வேண்டுகோளுக்கமைய ஓர் ஏகோபித்த தலைமை இன்று மக்களுக்கு அவசியமென உணர்ந்து செயற்பட முன் வந்துள்ளேன். எம்மைக் காப்பாற்ற வந்தவர்கள் தாமே தம்மையும் அழித்து, எம் உறவுகள் பல்லாயிரக் கணக்கானோரின் அழிவுக்கும் காரணமாகிவிட்டனர். அவர்களுக்கு வழிகாட்ட வந்த 22தலைவர்கள் தாமே தடம் புரண்டு வழிதவறி சென்றமையால் பல்லாயிரக் கணக்கான மக்களின உயிர் பறிகொடுக்கப் பட்டதோடு மக்கள் தமக்குச் சொந்தமான பலவற்றையும் இழந்தனர்.

அரசுடன் முரண்பட்டு தமிழ் மக்களின் உணர்வுகளை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க நான் விரும்பவில்லை. அதற்காக நான முன்வரவுமில்லை. நான் அரசாங்கத்தின் எடுபிடியுமில்லை. சரியானதை சரியெனவும், பிழையை பிழையெனவும தயங்காது கூறும் நடுநிலை வகிக்கும் அஹிம்சாவாதியும் நாட்டுப்பற்றாளனுமாவேன். எனது 77வது வயதில் எனக்கு இத்தகைய பதவி அவசியமில்லை. ஆனால் நாட்டில் பல்வேறு சமூகத்தினர் மத்தியிலும் என்னை ஒத்த தலைவர்கள் பலரையும் அவர்களின் சிந்தனைகளையும் நன்கு அறிந்திருக்கிறேன். எனக்குப் பின் என்னை ஒத்த நிலையில் வேறு யாரும் இல்லையென எண்ணுகிறேன். இருந்த பலர் மறைந்தும் அநேகர் கடல் கடந்தும் விட்டனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அடாவடித்தனத்தாலும் சில தலைவர்களின் தவறுதலான வழி நடத்தலாலும் யாழ் தேர்தல் மாவட்டத்தில் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் ஒன்பது பேரில் 36,000க்கு மேற்பட்ட வாக்குகளை பெற்று முதல் உறுப்பினராக தெரிவாகிய நான் தோற்கடிக்கப்பட்டு வெறும் கையுடன் திரும்பியதை மறந்திருக்கமாட்டீர்கள். உதய சூரியனை மீண்டும் உதிக்க வைப்பேன் என சபதம் எடுத்த நான் இன்று உதயசூரியனுடன் வந்துள்ளேன். எம மக்கள் இழந்தவை பல அவற்றில் சிலவற்றையேனும் மீட்டெடுக்க எனக்கு ஓர் வாய்ப்பினை தருமாறு வேண்டி நிற்கின்றேன். நீங்கள் ஈட்டித்தரும் இவ் வெற்றியானது மக்கள் எனக்கு அளித்த ஆணையாகக் கொண்டு உழைப்பேன் என உறுதி கூறுகின்றேன். வன்னி வாழ் மக்கள் இறுதிக் கட்டத்தில் அனுபவித்த பல்வேறு கஷ்டங்களை உடனுக்குடன் அரசின் கவனத்துக்கும், சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்ததும், வருவதும் என்பதை நீங்கள் அறியாததல்ல.

இது என்னுடைய நேரமல்ல. உங்கள் நேரம் ஜனநாயகத்தை நேசிக்கும் உங்களுக்கும் எமது மக்களின் ஜனநாயக கனவுகளுக்கும் கிடைத்த அரிய சந்தர்ப்பமாகும்.

எமது மக்கள் முற்று முழுதாக ஜனநாயகத்தின் சுவாசத்தை பெறும்வரை இதன் உண்மையான பலனை அனுபவிக்க இயலாது.

எவ்வாறு எம் மக்கள் மீது போரானது திணிக்கப்பட்டதோ, அவ்வாறே இன்று ஜனநாயகமும திணிக்கப்பட்டு வருகின்றது. தலைவர்கள் பிறக்கிறார்களே தவிர, எவராலும் உருவாக்கப்படுவது இல்லை. நிர்ப்பந்தம் இல்லாமற் கூட போரானது எவ்வாறு ஆபத்தானதோ, அவ்வாறே நிர்பந்திக்கப்படும் ஜனநாயகமும் ஆபத்தானது.

நான் கடந்து வந்த பாதை கடினமானது. மிகவும் கொடியது. என்னைப் பொறுத்தவரை நீங்கள தொடங்க வேண்டிய இடம் வந்து விட்டது என்றே கருதுகிறேன். எமது மக்களுக்கு மேண்மையான ஜனநாயக வாழ்வினை அமைத்துக் கொடுப்பதற்கு நான் என்றும் உங்களுக்குத் துணைநின்று வழி காட்டுவேன் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறான எண்ணம் உடையவர்கள் தாங்கள் பழையவர், புதியவர் என்ற வேறுபாடுகளுக்கப்பால் கட்சி பேதங்களுக்கப்பால் ஒருங்கிணைந்து அஹிம்சை வழியில் செயற்பட வருமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். ●

## என்ன செய்ய.........

01ம் பக்கத் தொடர்ச்சி

மான பணிகள் இருக்கின்றன. மக்கள் கரடுமுரடான தமது வாழ்வை சுமுகமாகக் கொண்டு செலவதற்கான வகையில் ஜனநாயகம் நிலைநாடடப்படுவதோடு, சமூக் பொருளாதார நடவடிக்கைகளும் துரிதப் படுத்தப்பட வேண்டும்.

யாழ் நகரத்தின் இடிபாடுகள், சிதைவுகளை நீக்கி குப்பை கூழங்கள் அகற்றப்பட்டு சுத்தமான நகரமாக யாழ் நகரம் மாற்றப்பட வேண்டும். தொற்று நோய்கள் பரவும் விதத்தில் உள்ள நீர் நிலைகள், தேக்கங்கள் சுத்திகரிக்கப் படவேண்டும். நுளம்புத் தொல்லையை நிரந்தரமாக இல்லாது ஒழிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தாறுமாறான பொலித்தீன் பாவனைகளினால் சூழல் மாசடைவதை முடிவிற்கு கொண்டு வர வேண்டும்.

* யாழ் நகரத்தின் வீதிகளை அழகுபடுத்தி, சூழல் பாதுகாப்புக்கு அனுகூலமாக விளங்கிய பல மரங்கள் அழிந்தும், அழிக்கப்பட்டும் உள்ளதை கவனத்துக்கெடுத்து பாரியளவிலான மரம் நடும் இயக்கம் ஒன்று நடைமுறைப் படுத்தப் படவேண்டும்.

ஏனைய நாடுகளின் முன்னுதாரணத்தை பின்பற்றி தெரு நாய்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் காப்பகங்களை ஏற்படுத்துவதன் மூலம் முறையற்ற வகையில் தெருநாய்களை அழிக்கும் நடவடிக்கைகளை கைவிடுவதுடன் அவற்றால் விளையும் தொல்லைகளையும் போக்கமுடியும்.

* யாழ் நகரின் ஒழுங்கைகள் அனைத்தும் குன்றும் குழியுமாக காணப்படுகிறது. எவ்வளவு பணத்தைக் கொட்டியும் இந்த வீதிகளின் நிலை மாறவில்லை. தட்பவெப்ப நிலைகளுக்கு நீண்டகாலம் தாக்குப் பிடிக்கக் கூடிய நிலையில் வீதிகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

யாழ் நகரில் உள்ள பாரிய குளங்களான ஆரியகுளம், புல்லுக்குளம் உள்ளிட்ட குளங்கள் சுத்திகரிக்கப் படவேண்டும். திறந்தவெளி அரங்கு, முற்றவெளி உள்ளிட்ட பகுதி மக்களின் பாவனைக்குகந்தாக செப்பனிடப்பட வேண்டும்.

போக்குவரத்து நெரிசல் மிக்க வீதிகளில் பாதசாரிகளுக்கும் சைக்கிளில் செலபவர்களுக்கும் வசதியாக வீதிகளின் இரு மருங்கும் பாதைகள் உருவாக்கப்பட வேண்டும்.

நகரின் மத்தியில் வர்த்தக நடவடிக்கைகளை விருத்தியாக்குவதற்கு புதிய வீதிகளை ஏற்படுத்தி முகப்பின்றி இருக்கும் காணிகளை வர்த்தக பயன் பாட்டுக்கு பொருத்தமானவையாக மாற்றுதல் வேண்டும்.

சிறுவர்கள், பெரியவர்களின் பொழுதுபோக்கிடங்கள் அமைக்கப்பட வேண்டும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் சிறு சிறு பூங்காக்களுக்கான இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

* திருநெல்வேலியிருந்து யாழ நகருக்கு குழாய்கள் மூலம் வினியோகிக்கப்படும் குடிநீர் தடையின்றி, தட்டுப்பாடின்றி அனைத்து மாநகரப் பகுதி மக்களுக்கும் கிடைக்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

குடாக்கடலின் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள மீனவர் குடியிருப் புக்கள் புனரமைக்கப்படுவதுடன் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் புதிய குடியிருபபுக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறைந்த செலவிலும், சிறிய இடத்திலும், அமைக்கப்படக் கூடிய புதிய வகை மலசலகூடங்கள நிறுவப்பட வேண்டும்.

* விவசாயிகள் தமது பொருள்களை சந்தைப்படுத்துவதில் இடையூறுகள் களையப்பட வேண்டும். தொடர்ந்து யாழ் நகரப்பகுதியிலுள்ள காய்கறிச்சந்தை, மீன்சந்தை என்பன விரிவாக்கப்பட வேண்டும், நவீனமயப் படுத்தப் படவேண்டும் அத்துடன் போதிய இடவசதி ஏற்படுத்தப் படவேண்டும்.

* அத்தியாவசிய பொருட்களின் விலைகள், தரம் என்பன சீரானதாக இருக்கின்றனவா என்பதை கண்காணிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள்வேண்டும்.

* போசனசாலைகளில் உணவின் தரம் சுத்தம் என்பன தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். போசன சாலைகளின் கொல்லைப்புற சுகாதாரம் போதிய அவதானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

* நடமாடும் நூலகங்களை உருவாக்கி வாசிக்கும் பழக்கத்தை ஊக்கிவிக்க வேண்டும்.

* சுத்தமான கட்டண கழிப்பிடங்கள் மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள இடங்களில் நிறுவப்பட வேண்டும்.

* துவிச்சக்கர வண்டி உட்பட புதிய வாகனத்தரிப்பிடங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

* கழிவு நீர் வடிகால்கள் தங்குதடையின்றி தேக்கம் அடையாமல் விரைவாக அகற்றப்படும் வகையில் பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பு அங்கிகள், கருவிகள் நவீன முறைகள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

நகரத்தைப் பொறுத்தவரை இவற்றையொத்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியிருக்கிறது. பாரிய அழிவைச் சந்தித்த நகரம் என்ற வகையிலும் மாநகரசபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இல்லாதிருந்ததினாலும், நாட்டின் ஏனைய பகுதிகளுடன் சீரான தொடர்புகளை இழந்தமையாலும் யாழ் மாநகரசபை பெரும் சவால்களை எதிர்நோக்கி நிற்கின்றது.

இலங்கையின் இரண்டாவது பெரிய நகரம் சோபை இழந்து காணப்படுகின்றது. இது புனர்ஜென்மம் பெறவேண்டும். மக்களே! உங்களின் பங்களிப்புடன் தான் நாங்கள் மாற்றங்களை காணலாம்

எதிர்வரும் யாழ் மாநகரசபைத் தேர்தலில் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினராகிய நாம் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகளுடன் இணைந்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். உங்கள் ஆதரவினை எதிர்பார்த்து நிற்கிறோம்.

*பத்மநாபா- ஈ.பி.ஆர்.எல்.எவ்.*

## சென்னையில் தியாகிகள் தின நிகழ்வு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் எம் இனிய மக்களுக்கு!

கடந்த கால் நூற்றாண்டுகளில் நீங்கள அனுபவித்த வேதனைகள் சோதனைகள் உலக மானிடம் சமகாலத்தில் கண்டிராதவை. பலஸ்தீனர்கள் கொங்கோவின் டுட்சி இன மக்கள் பொஸ்னியா என உலகின பல பாகங்களிலும் மனிதகுலத்திற்கு எதிராக குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன.

**மக்களே!** நாம் அனுபவித்த துன்பங்கள் உலகில் வேறு பாகங்களில் நிகழ்ந்த உரிமை மீறல்களுக்கு கொஞ்சமும் குறைந்தவையல்ல.

இருபத்தைந்து ஆண்டுகள் நாங்கள் அனுபவித்ததை சர்வசாதாரனமாக எடுத்துக்கொள்ள முடியாது. இதுவரை இலட்சம பேர்வரை எமது மக்கள் பலி கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

**மக்களே!** நீங்கள் எத்தனைபேர் உங்கள் பிள்ளைகளை இழந்திருக்கிறீர்கள். கணவரை, மனவியை, தாய், தந்தையர்களை இழந்திருக்கிறீர்கள். உற்ற சுற்றத்தை இழந்திருக்கிறீர்கள்.. உங்கள் கண முன்னாலேயே உங்கள் ஊர், உங்கள் நகரம், சிதைந்தழிந்து போவதைப் பார்த்திருக்கிறீர்கள். பீரங்கிகளின் நிழலில் வெடியோசைகளின் நடுவே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு எவ்வளவு தூரம் ஓடியிருப்பீர்கள். எத்தனை தடவை இடம் பெயர்ந்திருபீர்கள். உங்களில் பலருக்கு உங்களின் பூர்வீக கிராமம் சில வேளைகளில் மறந்து போயிருக்கும், சில வேளைகளில் அது உயர் பாதுகாப்பு வலயமாக இருக்கக்கூடும், சில வேளைகளில் கண்ணிவெடி புதையுண்ட பூமியாகவும் இருக்கும். சிதிலமான ஞாபகச் சின்னங்களுடன் காட்சியளிக்கும். சில வேளைகளில் சுவடே தெரியாமல் அழிந்து போயிருக்கும்.

ஏறத்தாழ மூன்று இலட்சம் எங்களின் உறவுகள் வன்னியில் முகாம்களில் கம்பி வேலிகளின் பின்னே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உறவுகள் பிரிந்து சிதறுண்டு கிடக்கின்றோம்.

**மக்களே!** இந்த நரக வாழ்விலிருந்தும், துரத்தும் துயரத்திலிருந்தும் விடிவு வேண்டும்.

நாம் எமது வீடுகளில், எமது நிலத்தில் எமது உற்றத்துடன் கௌரவமாகவும், சுதந்திரமாகவும், சுயமரியாதையுடனும் வாழ வேண்டும். வாழ்வதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். நம்பிக்கையெனும் ஒளி ஏற்றிவைக்கப்பட வேண்டும்.

"தேடி சோறு நிதம் தின்று பல சின்னஞ்சிறு கதைகள் பேசி.......

வேடிக்கை மனிதரைப்போல நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ"

என்ற பாரதியின் வரிகளுக்குகிணங்க நாம் வாழவேண்டும். வாழவே பிறந்தோம் மூக்கும் முழியுமாய் வாழவே பிறந்தோம் என்பது ஈழத்தமிழ் கவிஞன் ஒருவனின் குரல்.

"மனிதர்களின் மகிழ்ச்சியான வாழ்விற்காகவே நாம் போராடுகின்றோம். அதற்காக மகிழ்ச்சியாக மரணிக்கவும் தயராக இருக்கிறோம்."

என்று செகோஸ்லாவாக்கியாவின் நாஜி சிறையில் கொல்லப்பட்ட இளம் கம்யூனிஸ்ட் "யூலியஸ் பூசிக்" தனது தூக்கு மேடைக் குறிப்பு என்ற தனது மரணசாசனத்தில் எழுதியிருந்தான்.

எமது மக்கள் இழந்த இழப்புகளுக்கும், சுமந்த வேதனைகளுக்கும் நியாயம் வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். **மக்களே!** நாம் வாழும் பிரதேசங்களில் எமது அலுவல்களை நாங்களே பார்த்துக் கொள்ளும் விதமாக ஐக்கிய இலங்கைக்குள் எமக்கு அரசியல் தீர்வு வேண்டும்.

எமது பிரதேசங்களின் சட்டம் ஒழுங்கை நாமே பார்த்துக்கொள்ளும் விதமாகவும், எமது பிரதேசங்களில் நிலங்களின் பயன்பாடு எமது கைகளில் இருக்கவும், எமது பிள்ளைகளின் கல்வி எதிர்காலம் எம்மிடம் இருக்குமாறும, எமது பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை நாமே மேற்கொள்ளவும், எமது கலாச்சாரத்தை வளர்ததுக்கொள்ளவும், எமது மக்களின் போக்குவரத்து மற்றும இதர சேவைகளை நாமே பார்த்துக் கொள்ளவும், எமது கடற்றொழிலில் அபிவிருத்திகளை, விவசாய முன்னேற்ற நடவடிக்கைகளை நாமே மேற்கொள்ளவும், தொழில்துறைகளை விருத்திசெய்யுமாறும், நீர் வளங்களை பாதுகாக்கவும் எமது சுறறாடலை பேணவும் எமக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

எமது சுயாதீனம், எமது தனித்துவம் சுதந்திரமான சமூக பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றுடன் ஐக்கிய இலங்கையின் பாகமாக நாம் வாழவேண்டும்.

**மக்களே!** இனவாத சக்திகள் சமூகங்களை கூறு போடுகின்றன, சமூகங்களை மோதவிடுகின்றன. இந்த இனவாத நெருப்பில் குளிர்காய்கின்றன. நாட்டின் ஒரு பகுதி மக்கள் இரண்டாந்தர பிரஜைகளாக வாழவேண்டும், பெரும்பான்மையினரை அண்டி பிழைக்க வேண்டும் என்று அகங்காரம் கொண்டுள்ளன.

இதே போல் சர்வதேச அளவில் செயற்படும் தமிழ் இனவாத சக்திகளும் நிழல அரசாங்கம் என்று சொல்லி புலம்பெயர் நாடுகளில் தமிழர்களிடம் நிரந்தரமாக பணம் அறவிட்டு பிழைப்பு நடத்த தலைப்பட்டுள்ளன.

**மக்களே!** இங்கு வாழ்பவர்கள் நாம் எமது தனித்துவத்துடன்

"நாமார்க்கும் குடியல்லோம்" என்ற கௌரவத்துடன் சிங்கள, முஸ்லீம் மக்களுடன் ஐக்கியமாகவும், சமத்துவமாகவும், வாழ்த்தலைப்பட வேண்டும்.

**மக்களே** இது விடயத்தில் எமது அண்டை நாடு ஆயிரம் மில்லியன் மக்கள கொண்ட நாடு - இந்தியா எமக்கெல்லாம் முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

அங்கு ஹிந்திமொழி பேசுபவர்கள், மராட்டி, தமிழ், தெலுங்கு, வங்காளம், அசாமி குஜராத்தி, பஞ்சாபி என பல மொழி பேசும் பல கலாச்சாரங்களைப் பின்பற்றும் வெவ்வேறு சமய நம்பிக்கைகளைக் கொண்டிருக்கும் மக்கள் ஒரே தேசமாக, இந்தியர்களாக வாழ்கின்றார்கள். அந்த மாபெரும் நாட்டில் மக்கள் தாம் இந்தியர்கள் என்பதை பெருமிதம் கொள்கின்றார்கள்.

**மக்களே!** நாம் இதனை முன்னுதாரணமாக கொள்ளவேண்டும். நாங்கள் சிறிய நாட்டில் இருக்கின்றபடியால், அதுவும் ஒரு தீவாக இருக்கின்றபடியால் இனவாத குறுகிய எண்ணங்கள் இந்த நாட்டை ஆட்டிவைக்கின்றனவோ தெரியாது. ஆனால் நாம் அனைவரும் இலங்கையர் என்று எண்ணுவதற்கான நிலைமைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் பொதுவாகவே ஒவ்வொருவரும் தமது இனங்களைக் குறிப்பிட்டு தம்மை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஒன்றில் தமிழர் அல்லது முஸ்லீம்கள் அல்லது சிங்களவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள்.

எனவே மாற்றம் அவசியப்படுகிறது பேரினவாத, சிற்றினவாத சக்திகள் தோற்கடிக்கப்பட வேண்டும். இனத்தளைகளை அறுத்து மக்கள் சுதந்திரமாக உறவு பூணவேண்டும்.

**மக்களே!** எமக்கு ஜனநாயக அரசியல் பாரமபரியமொன்று தேவைப்படுகிறது. வெவ்வேறு அரசியற் கருத்துக்களை கொண்டவர்கள், சிந்தாத்தங்கள், கொள்கைகள் கொண்டவர்கள் தமது கருத்துகளை சொல்லுவதற்கும் விவாதிப்பதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும். சமூகத்திற்கு பாதகம் இல்லாதவரை இது அனுமதிக்கப்படவேண்டும்.

"நூறு மலர்கள் மலரட்டும் நூறு கருத்துகள் முட்டி மோதட்டும்" என்ற தோழர் மாவோவின் கருத்துக்கள் இங்கு சிந்தனைக்குரியவை.

வெவ்வேறு கருத்துக்களின் சங்கமத்திலேயே செழுமை உருவாகிறது. கருத்து வேறுபாடுகள் துப்பாக்கிகள் மூலம் தீர்வு காணப்படும் முறை எமது சமூகத்தில் அடியோடு இல்லாது ஒழிக்கப்பட வேண்டும். எமது சமூகத்தில் எஞ்சியிருக்கும் வன்முறையில் காதல் கொண்ட மனநோயாளிகள் மனநோய் சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டும். வன்முறையை விதைப்பதற்கான வளங்கள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும். வன்முறை சமூகத்தில் தலைதூக்குவதற்கான காரணிகளை இனங்கண்டு அவை களையப்பட வேண்டும்.

காழ்ப்புணாவையும் வெறுப்பையும் உமிழாத தற்கரீதியாக. அறிவு ரீதியாகச் செயல்படும் அரசியல் பண்பாடு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அண்ணல் காநதியடிகள் காட்டிய வழியில் மாபெரும் மக்கள் இயக்கம் ஒன்று சமூகநீதிக்கவும் சமூக விழிப்புணர்சியை ஏற்படுத்துவதற்காகவும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மனிதர்களை மதிக்கும் கண்ணியமான உறவுமுறை சமூகத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டும். வறுமை ஒழிக்கப்பட வேண்டும். சமூகத்தில் பெருவாரியானோர் வறுமையில் உழலும் நிலை அகற்றப்பட வேண்டும். உணவு, கல்வி ,மருத்துவம், இருப்பிடம் போன்ற ஜீவாதார விடயங்கள் அனைத்து மக்களுக்கும் கிட்டுவதற்கு நாம் எம்மை அற்பணிக்க வேண்டும்.

தீண்டாமை, பெண் அடிமைத்தனம் என்பவற்றுக்கு எதிரான போராட்டமும் விழிப்புணர்ச்சியும் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

எல்லோரும் சமத்துமான மனிதர்கள் என்ற அமரத்துவ நிலை ஏறபடவேண்டும்.

தற்போது உருவாகியுள்ள சூழ்நிலையில் மக்களுடன் உறவாடி இந்த உயரிய நோக்கங்களுக்காக உழைத்தலே எமது கனவாகும்.

எமது அனைத்து
உழைப்பும் மக்களுக்கே

தி.ஸ்ரீதரன்

பத்மநாபா ஈழமக்கள்
புரட்சிகர விடுதலை முன்னணி.

# ஐக்கியப்படுவோம்

## தமிழ் மக்களே

**ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவத்திற்காக ஐக்கியப்படுவோம்**

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

## உங்கள் வாக்குகள் உதய சூரியனுக்கே

- மாநகரசபைத் தேர்தலில் நாம் பங்கு பற்றுவது மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தவும், பயத்திலிருந்து விடுபடவும் ஜீவாதார தேவைகளை நிறைவு செய்யவுமே. இருண்டுபோன யாழ் மக்களின் வாழ்வு ஒளிபெற, உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்.
- தமிழ் மக்களே! அரசில் அதிகாரத்தை வென்றெடுக்கவும் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்யவும், உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்.
- மனித உரிமையும், ஜனநாயகமும், அரசியல் அதிகாரமும் எமது பிறப்புரிமை இவற்றை வென்றெடுக்க, ஆதரிப்பீர் உதயசூரியனை
- யாழ் மாநகர மக்களின் வாழ்வில் அமைதி தவழ, சுத்தமான நகரத்தை உருவாக்க யாழ் மாநகரம் பொலிவு பெற, ஆதரிப்பீர் உதயசூரியனை.
- கல்வி எமது மக்களின் கண்கள் யாழ் நகரில் அறிவுச் சுடரை ஏற்றிவைக்க, ஆதரிப்பீர் உதயசூரியனை.
- யாழ் நகரின் சுற்றுச் சூழலை பாதுகாக்க ஆதரிப்பீர் உதயசூரியனை.
- கல்விச்சாலைகளை மாநகர் எங்கும் பிரகாசிக்கச் செய்ய, ஆதரிப்பீர் உதயசூரியனை
- எமது மீனவ மக்களே உங்கள் வாழ்வு ஒளிபெற, ஆதரிப்பீர் உதய சூரியனை
- விஷம் போல் ஏறும் விலைவாசியை கட்டுப்படுத்த நியாய விலையில் பொருள்கள் கிடைப்பதை உறுதிசெய்ய, ஆதரிப்பீர் உதயசூரியனை.
- எமது மக்களுக்கு பாதுகாப்பான வாழ்வை உறுதிசெய்ய ஆதரிப்பீர் உதயசூரியனை.
- சுகாதாரத் தொழிலாளரின் வாழ்வு நலம் பெற, ஆதரிப்பீர் உதயசூரியனை.
- நகரத்தின் தொழில் வளம் சிறக்க, ஆதரிப்பீர் உதயசூரியனை.
- நகர வீதிகளை செப்பனிட்டு எமது மக்களின் கடினமான வாழ்வை இலகுபடுத்த, ஆதரிப்பீர் உதயசூரியனை.
- பெண்களினதும் சிறார்களினதும் நலன்களை உறுதிசெய்ய, ஆதரிப்பீர் உதயசூரியனை.
- தொழிலாளரின் உரிமைகளை பாதுகாக்க, ஆதரிப்பீர் உதயசூரியனை.
- சகல விதமான சமூக அநீதிகளையும் களைந்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்க உங்கள் வாக்குகளை உதயசூரியனுக்கே அளியுங்கள்.
- நகரத்தின் அனைத்து மக்களுக்கும் சுத்தமான குடிநீர், தூய்மையான சுற்றாடல் அமைவதற்கு ஆதரப்பீர் உதயசூரியனை.
- தேங்கிய சாக்கடைகள் அகலவும் நவீன வடிகால்களை அமைக்கவும் ஆதரிப்பீர் உதயசூரியனை.
- யுத்தத்தால் அழிந்தவற்றை மறு நிர்மானம் செய்ய ஆதரிப்பீர் உதயசூரியனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகிகள் தின நிகழ்வுகள் 2009

## லண்டனில்

வெளிநாட்டுப பிராந்தியத்தினரால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் 'தியாகிகள் தினம்' 2009 ஜூன் 20ந்திகதி, தெற்கு இலண்டனில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஸ்ரீலங்கா வாழ் மக்கள்பால் அக்கறை கொண்ட அரசியல், சமூகச் செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள், இதர அமைப்புகளைச் சார்ந்தவர்கள், சிங்கள, முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தோர், ஈபி.ஆர்.எல்எவ் இன் பிரான்ஸ், ஜேர்மன் கிளைகளின பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐரோப்பிய பிராந்தியத்தின் முக்கியஸ்தர்களான முத்துக்குமார், வேலாயுதம், ஜெசிந்தா ஆகியோரின் குத்துவிளக்கேற்றலைத் தொடர்ந்து, மௌன அஞ்சலியுடனும் இலண்டன் பொறுப்பாளர் சிறாப் அவர்களினால் தொடங்கப்பட்ட இந்த நிகழ்வில், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரலாறு சம்பந்தமான சில படங்கள், சுவரொட்டிகள், பிரசுரங்களின் முன்தோற்றங்கள் ஆகியவவை திரையில் காட்டப்பட்டன.

"வெள்ளைப் பூக்கள் மலரவே..." என்ற பாடலுக்கான நடன நிகழ்ச்சி, கவியரங்கம் ஆகியனவற்றைத் தொடர்ந்து, ஈ.பி.ஆர்.எல்எவ் பிரான்ஸ் கிளையிலிருந்து மோகன், ஜேர்மன் கிளையிலிருந்து அலெக்ஸ், மற்றும் இலண்டன் உறுப்பினர் லாவீர் ஆகியோர் உரையாற்றினர்.

இங்கு புளொட் சார்பில் அதன் பிரதிநிதி தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து அரசியல் முன்னெடுப்புகளை எடுக்க வேண்டும்; இதற்கு முன்னோடியாகவே, ரி.யு.எல்.எவ், ஈபிஆர்எல்எவ், புளொட் ஆகிய மூன்று கட்சிகளும் கொளகைகளில் ஒற்றுமையைப் பேணி, மக்கள் மத்தியில் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளதாகவும், இது தொடர வேண்டும் என்றார்

உபாலி கூரே, அவர்கள் உரையாற்றும் போது அமரர் பத்மநாபா இலங்கையின் அனைத்துச் சமூகங்களின் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையில் நம்பிக்கை கொண்ட ஒரு உன்னத மனிதன்; அவரது படுகொலை தமிழ் மக்களது மட்டுமல்ல, இலங்கையின் அனைத்துச் சமூகத்தினரதும் இழப்பு என்றார்.


1980களில், தான் சார்ந்த கட்சியைச் சேர்ந்தோர் சிலர், ஆயுதம் தாங்கியோருடன் இணைந்து வேலை செய்வதில் முதலில் ஐயப்பாடுகள் கொண்டிருந்தாலும், கொள்கைகள் அடிப்படையில், இலங்கையின் ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் எதிர்கால சுபீட்சத்திற்கு சேர்ந்து உழைப்பதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ தான் உகந்தது என்ற முடிவுக்கு வந்தமையையும், அதற்கான முயற்சிகளில் தான் ஈடுபட்டமையையும் எடுத்துரைத்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பாக தம்பா உரையாற்றும் பொழுது, பத்மநாபா எப்பொழுதுமே சாதாரண மனிதர்களுடன் ஒரு சாதாரண மனிதனாகப் பழகும் பண்பினைக் கொண்டிருந்தார்; 'மக்களில்லாத மண்ணை நாம் நேசிக்கவில்லை, மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம்' என்பதிலும், எமது பொது எதிரி யார் என்பதிலும் தெளிவாக இருந்தார்

இனங்களுக்கிடையிலான ஐக்கியம் இன்றியமையாதது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். தனது கட்சியின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது, தமிழர்நலன் கருதி, மற்றைய தமிழ்க் கட்சிகளுடனான ஒற்றுமைக்காக முயன்றார். அந்த முயற்சியின் விளைவாகவே எல்ரிரிஈபிஆர்.எல்எவ், ரெலோ, ஈரோஸ் ஆகியவை ஒன்றிணைந்த ஈ.என்.எல்.எவ் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

இந்தியாவின் தலையீட்டினால் ஏற்படுத்தப்பட்ட அனைத்து வடக்கு-கிழக்கு சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருகோணமலையை தலைநகராகக் கொண்ட வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையை ஒரு ஆரம்ப படிக்கல்லாக ஏற்றுக்கொள்ளாது நிராகரிக்கப்படின், அது தமிழ்பேசும் மக்களின் ஈடுசெய்ய முடியாத அழிவிலேயே கொண்டு போய்விடும் என்பதில் அவர் மிகத் தெளிவாக இருந்தார்; அம் மகாணசபையை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றைய கட்சிகளுக்கு அதில் முன்னுரிமை கொடுக்கவும் முன்வந்தார் எனக் குறிப்பிட்டார்.





அவரது கொள்கைகளின் தாற்பரியங்களையும், அவரது அரசியல் தீர்க்கதரிசனத்தையும் மக்கள் உணராதவாறு, ஈபிஆர்எல்எவ் மீது தமிழ் ஊடகங்களும் சமூகப் பிரமுகர்களாக தம்மைக் காட்டிக்கொண்டவர்களும் வசைமாரி பொழிந்தனர். இந்தப் போக்கின் பாரதூர விளைவுகளைத் தமிழர்கள் இன்றும் அனுபவிக்கிறார்கள் என்றும் தனது உரையில் குறிப்பிட்டார்.

இப்பொழுது உள்ள நிலைமையை ஒரு அரை மட்டத்திற்கு தண்ணீர் உள்ள பாத்திரத்தை, 'அது அரைவாசி வெறுமையாக இருக்கிறது' என்று ஒரு கண்ணோட்டத்திலும், 'அது அரைவாசி நிறைவாக இருக்கிறது' என்று இன்னுமொரு கண்ணோட்டத்திலும் பார்க்கக் கூடியதுபோல், தற்போதைய நிலைமையையும் பார்க்கலாம் என்றார். இன்றைய நிலைமையில், கொலைகள் கணிசமாகக் குறைந்துள்ளமை, வீதித் தடைகளும், மீனபிடித் தடைகளும் குறிப்பிடத்தக்களவில் நீக்கப்பட்டுள்ளமை, ஏ-9 வீதியூடாக பிரயாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை ஆகியன மக்களைப் பொறுத்தளவில் முன்னேற்றமான நிகழ்வுகளே . அதேவேளை, தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவது, மக்கள் பிரதிநிதிகள மக்களால் தேர்ந்தெடுப்பது போன்ற பல விடயங்கள் இன்னமும் செயற்பட வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் 'ஏகப்பிரதிநிதிகள்' என்பதினை ஏற்றுக்கொள்ள முடியாது என ஈ.பி.ஆர்.எல்.எவ் எப்பொழுதும எதுவித மாற்றமுமின்றி கூறி வருகிறது.

புலிகளின் [illegible]ாணுவ முன்னெடுப்புகளும், பலங்[illegible]ளும் வலிமையிழக்கப்படாதிருந்தால், தமிழர்களின் நிலைமை இன்னமும் மோசமாகியிருக்கும் என்பதுதான் உண்மை.

இப்பொழுது, தமிழர்களின் நிலையைச் செப்பனிட்டு, வன்முறைகளற்ற ஜனநாயக விழுமியங்களையும் மனித உரிமைகளையும் பேணும் ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்பும் கடமை அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் இருக்கிறது. அந்த அடிப்படையிலேயே எமக்குள் ஐக்கியம் ஏற்படல் வேண்டும், அதனை நோக்கி நாம் செயலாற்ற வேண்டும் என்றார்.

நிகழ்வின் இறுதி நிகழ்ச்சியாக ஒரு கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. சிவா அனுசரணையாளராக சில கேளவிகளை முன்வைக்க அவற்றின் மீது வெவ்வேறு கருத்துக்களைக் கொண்ட சிவலிங்கம், கீரன், உபாலி கூரே ஆகியோர் தமது கருத்துக்களைத் தெரிவிக்க, வருகையாளர்களும் தத்தம் கருத்துக்களை தெரிவிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

கலந்து கொண்டு பங்குபற்றிய அனைவருக்கும், நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக நிறைவுற செயற்பட்ட ரவிக்கும் மற்றையோருக்கும், ஈபிஆர் எல்எவ் இலண்டன் கிளையினர் சார்பாக சிறாப் அவர்களின் நன்றி தெரிவித்தலுடன் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன

## சுவிஸ்சில்

சுவிஸ், பேர்ன் நகரில் தோழர் ராஜன் தலைமையில் இடம்பெற்ற தியாகிகள் தினம் - 2009 திருமதி பெர்ணான்டோ, திருமதி செந்தா ஆகியோர் குத்துவிளக்கேற்றியதைத் தொடர்ந்து மரணித்த தியாகிகளுக்கு இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமைதி, சமாதானத்தை வெளிப்படுத்தும் வகையில் வெள்ளை பூக்கள் மலரவே என்ற பாடலுக்கு சிறுமிகள் நடனம் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றி தோழர் பெர்ணான்டோ தோழர் நாபா அவர்களின் தலைமையில் அரசியல் பணி செய்ததையும், மரணித்த தோழர்களையும் மறக்க முடியாது என்றார்.

ஈ என். டி எல் எப் சார்பாக தோழர் ராஜா தோழர் நாபா சகோதர அமைப்புக்களுடன் எப்படி விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்பட்டாரோ அதேபோல் இன்றைய காலகட்டத்திலும் தமிழ்க் கட்சிகள் விட்டுக்கொடுப்புக்களுடன் கூடிய ஐக்கியத்தை பேண வேண்டிய தன் அவசியத்தை குறிப்பிட்டார்.

தோழர் அலெக்ஸ் எந்த மக்களின் சுபிட்சமான எதிர்கால வாழ்வுக்காக எமது தோழர்கள் போராடி மரணித்தார்களோ அவர்களின் இலட்சியங்களை வென்றெடுப்பதே நாம் அவர்களுக்கு செய்யும் அஞ்சலியாகும் என்றார்

தோழர் சங்கர்(முன்னாள் பா.உ) தோழர் நாபா அவர்களின் உயரிய இலட்சியங்களையும் தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களுக்கிடையிலான ஐக்கியத்துக்காக உழைத்ததையும் நாம் என்றுமே மறக்கமுடியாது. தமிழ் சிங்கள தேசியவாத சிந்தனை போராட்டங்களுக்கப்பால் இலங்கை தேசியம் என்ற உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டிருந்தார் என்றார்



இறுதியாக தோழர் பாஸ்கரன் இந நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பாக நன்றிகளை தெரிவித்தார்

### தியாகிகளின் நினைவாக நிழல்குடை

திருஞானசம்பந்தர் வீதி, மின்சார நிலைய வீதி, வெலிங்டன் அடைவீதி ஆகிய மூன்று வீதிகளையும் இணைக்கும் மையப்பகுதியில் 2009 தியாகிகள் தின நினைவாக பஸ் தரிப்பு நிலையம் தோழர் சத்தியன் (சி. சிவக்குமார்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



## திருகோணமலையில்





திருமலை கடற்கரை வீதியிலுள்ள பிராந்திய அலுவலகத்தில் காலை 10.00 மணியளவில் பத்மநாபா ஈ.பிஆர்.எல்.எப் பிராந்திய பொறுப்பாளர் தோழர் சிவம், புளொட் மாவட்ட அமைப்பாளர் அசோக் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். தோழர் ராசா தோழர்களின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்த பின்னர் மரணித்த தோழர்கள், போராட்டக்காரர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தோழர் பத்மநாபாவை நினைவு கூரும் பயணிகள் நிழல் குடை அமைப்பதற்கான வேலையை தோழர் சீலன் மேற்கொண்டார். அடிக்கல்லை தோழர் சத்தியன் நாட்டினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தியாகிகள் தின நிகழ்வுகள் 2009

## மட்டக்களப்பில்

**அனைவரும் ஒன்றுபட்டு உறுதிபூண அறைகூவல்**

☐ யுத்தம் காரணமாக விதவையாக்கப்பட்ட பெண்கள், தாய், தந்தை சகோதரங்களை இழந்த உறவுகளின் வாழ்வு வளம் பெற குரல் கொடுப்போம்.

☐ சிதைந்து போயுள்ள எமது பாரம்பரிய மனித விழுமியங்களை மீள்கட்டியெழுப்புவோம்

☐ ஆயுத வன்முறையிலிருந்து சமூகத்தை முழுமையாக மீட்டெடுப்பதற்கு அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி வன்முறைக்கெதிராக குரல் கொடுப்போம்.

☐ ஆயுத ஆதிக்கம் காரணமாக நலிவடைந்து போன கல்வியை மீண்டும் தொடர வீட்டுக்கொரு மாணவரை புலமை சித்திபெற வைக்கவும் வீட்டுக்கொரு பட்டதாரியை உருவாக்கவும் எமது சமூக அமைப்புக்களை விழிப்படையச் செய்வோம்.

☐ எம்மிடமிருந்து புலிகளால் பறிக்கப்பட்ட தனி மனித சுதந்திரத்தையும், ஜனநாயக பன்மைத்துவத்தை கட்டியெழுப்புவதோடு கல்வியறிவுடைய பண்புள்ள சமூக தலைமையை உருவாக்க உழைப்போம்.

☐ வன்முறை ஆயுத கலாச்சார மோகத்தால் கவரப்பட்டு சீரழிக்கப்பட்ட அப்பாவி இளைஞர் யுவதிகளின் வாழ்க்கை மீட்சிபெற அயராது பாடுபடுவோம்.

☐ யுத்தம் காரணமாக சேதமாக்கப்பட்ட, சிதைந்துபோன, அழிக்கப்பட்ட உயிர் உடைமைகள், விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு சிறுகைத் தொழில், கல்வி, கலாச்சாரம், பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உறுதுணையாக இருப்பதுடன் அரசையும், நிதி நிறுவனங்களையும் உதவுமாறு கோருவோம்.

☐ தமிழ் பேசும் மக்களின் அதிகாரப் பரவாக்கலை அரசு உறுதி ப்படுத்தும் வரை தொடர்ந்து இடித்துரைப்போம்.

☐ எமது மாவட்டத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை இழப்பதற்காக போடப்படும் சதியை உடைத்தெறிய அரசியல் கட்சிகளையும், தமிழ் சமூக தலைமையை விழிப்படையச் செய்து அரசியற் பலத்தை நிருபிப்பதற்கு முன்னின்று உழைப்போம்.

☐ எமது நாட்டில் எத்தரப்பினராலும் மீறப்படுகின்ற அடிப்படை மனித உரிமை மீறலை தடுத்து நிறுத்த குரல் கொடுப்போம்

பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம்












## யாழ்ப்பாணத்தில்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தமது உயிரை அர்ப்பணித்த எமது தோழர்கள், சக இயக்கப் போராளிகள், பொதுமக்களை நினைவு கூரும வகையில் (19.06.2009) தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது

பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியின யாழ் பிராந்திய தலைமை அலுவலகத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் ஸ்ரீதரன், புளொட் அமைப்பின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் தோழர் கஜன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். கட்சியின் பொதுச் செயலாளரால் கட்சி கொடி ஏற்றப்பட்ட பின்னர் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் உருவப்படத்திற்கு கட்சி உறுப்பினர்கள மலர் மாலை அணிவித்தனர். உயிர் நீத்த தோழர்களின் பெற்றோர், உற்றார், உறவினர்கள் கட்சியின் நலன் விரும்பிகள் தியாகிகளின் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து தோழர் கங்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியின் யாழ் பிராந்திய செயலாளர் தோழர் மோகன், கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சிறிதரன் ஆகியோர் உரையாற்றினர்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட இறந்த தோழர்களின் பெற்றோர்களுக்கு கமுகு, மற்றும் பழ மர கன்றுகள் வழங்கப்பட்டதுடன். அவர்களின் பெயரில் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு வங்கிக்கணக்கு புத்தகங்கள் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் ஒத்துழைப்புடன் கட்சி அலுவலகத்தில் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு இரத்த தானம் வழங்கப்பட்டது.

தோழர் பத்மநாபாவும் 12 தோழர்களும் படுகொலை செய்யப்பட்ட நாளில் தமிழ் மக்களின் விடிவுக்கான போராட்டத்தில உயிர் நீத்த தோழர்கள், சக இயக்கப்போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூரும் வகையில் வருடந்தோறும் தியாகிகள் தினத்தை அனுஷ்டித்து வருகின்றோம்.

இவ்வருடம் தியாகிகள் தினத்தில் ஐக்கியத்தை வலியுறுத்துவதையே எமது கோசமாக ஆக்கியுள்ளோம் ஐக்கியத்தை மக்கள் விரும்புகிறார்கள் என்பதால் போலியாக நாம் கூறவில்லை. தமிழ் மக்களின் அபிலாசைகளை ஈட்டுவதற்கு இன்று ஐக்கியப்பட்ட










செயற்பாடு அவசியமானதாயுள்ளது. என கட்சியின் யாழ் பிராந்திய செயலாளர் மோகன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் போராட்டம் பாரிய பின்னடைவிற்கு உள்ளாகியிருக்கிறது. தமிழ் மக்கள் பாரிய அழிவுகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். அவலநிலைக்கு ஆளாகியுள்ளனர். இலட்சக்கணக்கானவர்கள் வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாடுகின்றார்கள், போக்குவரத்து வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எங்களுக்குக் கிடைக்கின்றன. எங்களுடைய தொழில்கள் முடக்கப்பட்டிருக்கின்றன. நாட்டின் ஏனையபகுதிகளில் வாழுகின்ற மக்கள் பாவனைப்பெருட்களை பெற்றுக்கொள்கின்ற விலைக்கு பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக நாங்கள் இருக்கின்றோம். இவ்வாறு பல்வேறு வகைகளிலும் எங்களுடைய மக்கள் அடைந்திருக்கின்ற இந்த துன்பத்திற்கு யார் காரணம் என்பதை ஒவ்வொருவரும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது.

புலிகள் ஆரம்பத்தில் எற்றுக்கொண்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும், அதன் மூலம் கிடைத்த மாகாண சபையையும் நிராகரித்தனர்.. எமக்கு கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு நிர்மூலமாக்கப்பட்டது. இன்றைக்கு எங்களில் பலர் இந்திய இலங்கை ஒப்பந்தம், மாகாணசபை மூலம் கிடைத்த அனுகூலங்கள் கிடைக்காதா என ஏங்குகின்றோம்.

பல்வேறு துன்பங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் நாங்கள் முகம் கொடுத்தாலும் எமது பிரதேசங்கள் விருத்தி செய்யப்பட வேண்டிய தேவையும் எங்கள் முன்னால் உள்ளது எனவும் குறிப்பிட்டார். இதனையடுத்து உரையாற்றிய கட்சியின் பொதுச்செயலாளர் தி. சிறிதரன்

ஈழவிடுதலைப்போராட்டம் எப்போது தோற்றது என்று கேட்டால் எப்போது ரெலோ இயக்கத்தை சேர்ந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு வீதியில் வீசப்பட்டார்களோ, அக்கொலைகளை புரிந்தவர்களுக்கு கொக்கோகோலா உடைத்து கொடுத்து பெருமிதம் அடைந்தார்களோ அன்றைக்கு ஈழவிடுதலை போராட்டம் தோற்றுப்போனது.

யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக நான் இதனை கூற வரவில்லை கடந்தகால நடவடிக்கைகளை பழிவாங்கும் உணர்வோடு பார்க்கவில்லை. பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே என்ற உணர்வோடுதான் பேசுகின்றோம்.

எங்களுடைய சமூகத்தில் மனிதர்கள் சுதந்திரமாக வாழ்வதற்காகத் தான் நாங்கள் போராட புறப்பட்டோம். தவறாக வழிநடத்தப்பட்டு கொல்லப்பட்ட இளைஞர் யுவதிகள் பொதுமக்கள தொடர்பான வேதனையும் எங்களுக்கு இருக்கிறது.

வேறுபட்ட கருத்துக்களுடன் வாழ்வதற்கான உரிமை இந்த சமூகத்தில இல்லாமல் போய்விட்டது. எங்களுடைய தோழர்கள், சக இயக்கங்களை சேர்ந்த தோழர்கள் பல கனவுகளுடன் இந்த போராட்டத்தில் பங்கேற்றார்கள். அந்த கனவுகளுடன் புறப்பட்டவர்களை கொல்வதற்கான உரிமையை இங்கு ஒரு இயக்கம் எடுத்துக்கொண்டது.

தமிழ் சமூகத்தின் பெறுமதி வாய்ந்த மனிதர்கள் தேடித் தேடி அழிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று இந்த சமூகத்திற்கு தலைவர்களே இல்லை என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டு சமூகம் மொட்டையடிக்கப்பட்டிருக்கிறது.

எங்களை தவிர எல்லாரும் பிழை நாங்கள் மட்டும்தான் சரியானவர்கள் என்று கருதுகின்ற போக்கு தலையெடுத்திருக்கின்றது எங்களை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. ஆதிக்க குணமும், பிற்போக்கு தனமான போக்குகளும் தான் எங்களை இந்த நிலைமைக்கு கொண்டுவந்திருக்கிறது.

இங்கு ஒரு ஜனநாயக சூழல் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. தற்போது பல்வேறு கஷ்டங்கள் இருக்கிறது போக்குவரத்து கஷ்டங்கள் இருக்கிறது, சோதனை சாவடிகள் இருக்கிறது. இவை அகன்று நாங்கள் இங்கு சுதந்திரமாக நடமாடக்கூடிய காலம் வரவேண்டும். ஆயுத வன்முறைகள் அனைத்தும் அற்றுப்போக வேண்டும். தமிழ் பிரதேசங்களுக்கு ஒரு சுய நிர்வாகம் உருவாக வேண்டும் அத்தகைய ஒரு நிர்வாகம் உருவாவதற்கான ஏதுநிலைகள் இருப்பதாக நாங்கள் திடமாக நம்புகின்றோம் எங்களுடைய விவகாரங்களை தமிழ் பிரதேசத்தில் நாங்களே பார்க்கக் கூடிய அதிகார கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் நாமார்க்கும் குடியல்லோம் என்ற வாழ்க்கையை ஐக்கிய இலங்கைக்குள் நாங்கள் காண விரும்புகின்றோம். என தோழர் ஸ்ரீதரன் தனது உரையில் தெரிவித்தார்.

## மன்னார்







தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் C. J. C Press 119 University Road Rattanapitiya Boralesgamuwa அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org